# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் : **10**

**கர்நாடக சங்கீதம் / කර්ණාටක සංගීතය** நேரம்: 1 மணித்தியாலம்

---

♦ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

1. இராகக் கதம்பம் என அழைக்கப்படும் உருப்படி
   1) ஜதீஸ்வரம் 2) ஜாவளி 3) பதம் 4) இராகமாலிகை

2. அ. ஸரிகபநிஸ
   ஆ. ஸநிபகரிஸ
   எனும் ஆரோகன அவரோகணத்தையுடைய இராகம்
   1) மோகனம் 2) ஹம்சத்வனி 3) ஆரபி 4) கமாஸ்

3. சங்கீத அளவுகோல் எனப்படும் வாத்தியம்
   1) வீணை 2) வயலின் 3) தம்புரா 4) மிருதங்கம்

4. ஒரு உருப்படியின் முற்பகுதி
   1) உத்தராங்கம் 2) பிற்பகுதி 3) சரணம் 4) பூர்வாங்கம்

5. பாடலில் அனைத்து அங்கங்களுக்கும் சாகித்தியம் இடம்பெறும் உருப்படி
   1) தானவர்ணம் 2) பதவர்ணம்
   3) இராகமாலிகை வர்ணம் 4) நவாவர்ணம்

6. கள்ளம் நிறை எனும் அனுபல்லவியையுடைய உருப்படி
   1) இனிதமக்கொகு 2) அள்ளியுண்டிடலாம்
   3) மூலாதார மூர்த்தி 4) உள்ளம் இரங்கி

7. 16 அட்சரங்களை எடுக்கும் தாளம்
   1) மிஸ்ரஜாதி மட்டியதாளம் 2) மிஸ்ரஜாதி ஜம்பை
   3) மிஸ்ரஜாதி அடதாளம் 4) மிஸ்ரஜாதி திரிபுடை

8. சங்கரா பரணத்தின் நேர் பிரதி மத்திம இராகம்
   1) நடைபைரவி 2) தோடி 3) கல்யாணி 4) பந்துவராளி

9. கெண்டை எனும் பாகம் காணப்படும் வாத்தியம்
   1) மகுடி 2) நாதஸ்வரம் 3) சங்கு 4) தம்புரா

10. ஒரு அலங்காரத்தை மூன்றாம் காலம் பாடும் போது எடுத்துக் கொள்ளும் ஆவர்த்தனங்கள்
    1) 10 2) 5 3) 2 1/2 4) 2



kalvi.lk

11. தாண்டவர் அருமருத்தொரு தனி மருந்து எனும் பாடலைப் பாடிய சந்தர்ப்பம்
   1) இறையடியாரிடமிருந்து யாதொரும் சொல் வெளிப்படாமை
   2) ஆற்றைக் கடந்து கரையேறிக் களிப்பு நிரம்ப பாடியமை
   3) ஆவணித் திங்கள் பூர நன்னாளில்
   4) பாம்பொன்று தீண்டியதும் உள்ளம் கலங்காமல்

12. ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வரும் இராகம்
   1) வர்ஜம்  2) உபாங்கம்  3) பாஷாங்கம்  4) வக்ரம்

13. சங்கீர்ண சாபு தாளத்தின் சொற்கட்டு
   1) தகதிமி  2) தகதகிட  3) தகதிமிதகதகிட  4) தகிட

14. தமிழில் பஞ்சரத்தினக் கீர்த்தனையை இயற்றியவர்
   1) கோபாலகிருஷ்ண பாரதியார்  2) முத்துத் தாண்டவர்
   3) பாபநாசம்சிவன்  4) புரத்தாஸர்

15. சங்கராபரண இராகத்தின் மேளசங்கேதப் பெயர்
   1) குத்ர - மா  2) பாண - மா
   3) நேத்ர - ஶ்ரீ  4) அக்கினி - கோ

16. ஹரிபாலர் எழுதிய நூல்
   1) யாழ்நூல்  2) சங்கீத சுதாகரம்
   3) சங்கிரகச் சூடாமணி  4) சதுர்தண்டி பிரகாசிகை

17. வில்லுப் பாட்டு நிகழ்வில் பங்கு பற்றுவோர்
   1) 5  2) 7  3) 3  4) 4

18. தோடி இராகம் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்
   1) சீதாராமய்யர்  2) நரசய்யர்
   3) பாபநாசம்சிவன்  4) பாரதியார்

19. புல்லாங்குழலில் உயர் சுருதியை உண்டாக்கும் துளை
   1) முகரந்திரம்  2) வாசிப்புத் துளை
   3) தாரதந்திரம்  4) முத்திரத்துளை

20. மத்தியமாவதி இராகத்தின் பண்
   1) பழம் பஞ்சுரம்  2) செந்துருத்தி
   3) இந்தளம்  4) கொல்லி

21. பண்ணியம் எனப்படுவது
   1) சம்பூர்ணராகம்  2) ஔடவஇராகம்
   3) ஸ்வராந்தரராகம்  4) ஷாடவ இராகம்


kalvi.lk

22. இனி நமக்கொரு கீர்த்தனையைப் பாடியவர்
   1) மயூரம் வேதநாயகம் பிளளை
   2) முரளீதரன்
   3) பாபநாசம் சிவன்
   4) தியாகராஜர்

23. உற்றுமை சேர்வது எனும் தேவாரத்தின் பண் இராகம் என்பன முறையே
   1) செந்துருத்தி, மத்தியமாவதி
   2) பழம் பஞ்சுரம், சங்கராபரணம்
   3) பஞ்சமம், ஆஹிரி
   4) கௌஷிகம், பைரவி

24. மோஹன இராகத்தில் படாப்படுவது
   1) திருத்தாண்டகம்
   2) ஸாமகானம்
   3) திருவாசகம்
   4) திருப்பல்லாண்டு

25. நந்தனார் சரித்திரம் எனும் நூலை எழுதியவர்
   1) பாபநாசம்சிவன்
   2) சியமாசாஸ்திரிகள்
   3) தியாகராஜர்
   4) கோபால கிருஷ்ண பாரதியார்

26. தெலுங்குப் பதங்களில் போற்றப்படும் தெய்வம்
   1) கிருஷ்ணர்
   2) முருகன்
   3) சிவன்
   4) வீரபத்திரர்

27. பிறழ்ச்சிப் பண் எனப்படுவது
   1) ஷாடவம்
   2) ஔடவம்
   3) திருவிசைப்பா
   4) பாஷாங்கம்

28. திருவிசைப்பாவின் பின் பாடப்படுவது
   1) திருவாசகம்
   2) வெண்பா
   3) திருவிசைப்பா
   4) திருப்பல்லாண்டு

29. மிஸ்ரஜாதி அடதாளம் எடுக்கும் அட்சர எண்ணிக்கை
   1) 18
   2) 22
   3) 16
   4) 12

30. சுத்த கர்நாடக இராகம் எது?
   1) கல்யாணி
   2) மத்தியமாவதி
   3) ஆரபி
   4) மோகனம்

31. சிட்டிபாபு அவர்களால் வாசித்து பிரசிதி பெற்ற வாத்தியம்
   1) தம்புரா
   2) வயலின்
   3) வீணை
   4) நாதஸ்வரம்

32. உபாங்க இராகமாக அடங்காதது
   1) மோகனம்
   2) மத்தியமாவதி
   3) கல்யாணி
   4) ஆரபி

33. கல்நாதஸ்வரம் காணப்படும் இடம்
   1) கும்பகோணம்
   2) சிதம்பரம்
   3) மதுரை
   4) காஞ்சிபுரம்


kalvi.lk

34. சௌக்க வர்ணம் எனப்படுவது

1) தான வர்ணம் 2) பதவர்ணம்
3) ஆதிதான வர்ணம் 4) மேற்கூறிய யாவும்

35. பால்வடியும் முகம் எனப்படும் உருப்படி வகை

1) ஜாவளி 2) வர்ணம் 3) கீதம் 4) பதம்

36. மத்தியமாவதி இராகத்தின் தாய் இராகம்

1) கரகரப்பிரியா 2) கல்யாணி
3) தோடி 4) பந்துவராளி

37. சந்தப்பாவலர் எனப்படுபவர் யார்?

1) திருநாவுக்கரசர் 2) சம்பந்தர்
3) அருணகரிநாதர் 4) முத்துத் தாண்டவர்

38. அப்பியாசகான உருப்படிகளில் முதன் முதலில் சாகித்திய ரூபாமாக கற்கும் உருப்படி

1) வர்ணம் 2) பதம்
3) கீர்த்தனை 4) கீதம்

39. காரைக்கால் அம்மையார் சரித்திரம் எனும் இசை நாடகத்தை இயற்றியவர்

1) பாபநாசம் சிவன் 2) கோபாலகிருஷ்ன பாரதியார்
3) முத்தத் தாண்டவர் 4) தியாகராஜர்

40. தக்கேசி தக்கராகம் போன்ற பண்களையுடைய இராகம்

1) காம்போதி 2) ஆஹிரி 3) பூபாளம் 4) மத்தியமாவதி

Education கல்வி අධ්‍යාපන

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020**

தரம் : **10**

**கர்நாடக சங்கீதம் / කර්ණාටක සංගීතය- 2** நேரம்: 2 மணித்தியாலங்கள்

---

♦ முதலாம் வினா உட்பட வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
   1) முருகா எனும் வர்ணத்தினை இயற்றியவர் யார்? (1 புள்ளி)
   2) இந்திய சங்கீதத்தின் இரண்டு பிரிவுகளும் எவை? (1 புள்ளி)
   3) இராவணன் சாமகானம் பாடிய இராகம் எது? (1 புள்ளி)
   4) ஒறுவிய பண் எனப்படுவது யாது? (1 புள்ளி)
   5) வர்ணம் ஒன்றில் ஒரு ஆவர்த்தனம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரங்களின் எண்ணிக்கை யாது? (1 புள்ளி)
   6) திருவிசைப்பா அடங்கும் திருமுறை எது? (1 புள்ளி)
   7) முத்துத்தாண்டவருக்கு பாம்பு தீண்டிய போது பாடிய கீர்த்தனை எது? (1 புள்ளி)
   8) தெலுங்குப் பதங்களின் நாயகன், நாயகியைத் தருக. (1 புள்ளி)
   9) நாதஸ்வரத்தின் இரு வகைளும் எவை? (2 புள்ளி)
   10) நவரோஜ் இராகத்திற்குரிய பண்கள் 2 தருக. (2 புள்ளி)

   (12 புள்ளிகள்)

2. பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக.
   1) புராணம் பாடும் இராகம்
   2) அக்னி - கோ
   3) பண் - பழம்பஞ்சுரம்
   4) 65 வது மௌகர்த இராகம்

   (12 புள்ளிகள்)

3. 1) அணைசு என்ற பாகம் காணப்படும் வாக்கியம் எது? (2 புள்ளி)
   2) இவ் வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)
   3) இவ் வாத்தியம் வாசிக்கும் முறையைத் தருக. (4 புள்ளி)
   4) இவ் வாத்தியம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்ற இரு கலைஞர்களைத் தருக. (2 புள்ளி)

   (12 புள்ளிகள்)

4. பின்வரும் உருப்படிகளுள் ஒன்றிற்கு விரிவான இரட்சனம் தருக.
   1) வர்ணம்
   2) பதம்

   (12 புள்ளிகள்)


kalvi.lk

5. சபாபதிக்கு எனும் கீர்த்தனையை இயற்றியவர் யார்?
   1) வாழ்க்கைக்காலம்
   2) பிறந்த இடம்
   3) பெற்றோர்
   4) இளமைக்கல்வி
   5) இசைப்பணி
   6) இயற்றிய உருப்படிகள்
   என்பவற்றை ஆராய்க.

(12 புள்ளிகள்)

6. இந்தியாவில் 14, 15 ம் நூற்றாண்டில் இயற்றிப்பட்ட நூல்கள், நூலாசிரியர்கள் பெயர்கள் அட்டவணைப்படுத்துக.

(12 புள்ளிகள்)

7. அடதாள அலங்காரத்தினை ஸ்வரதாளக் குறியீட்டுடன் எழுதுக.

(12 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) உபாங்க இராகம் 2) பாஷாங்க இராகம்
   3) வர்ஜராகம் 4) வக்ரராகம்

(6 + 6 = 12 புள்ளிகள்)

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**